# தென்மண்டல பல்கலை. மகளிர் ஹாக்கி போட்டி

# சென்னை பல்கலை. அணி சாம்பியன்

திருச்சி, டிச. 31–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் தென் மண்டல பல்கலை. மகளிர் ஹாக்கி போட்டி திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் கடந்த 26ம் தேதி தொடங்கியது. இதில் 33 அணிகள் பங்கேற்றன.

'நாக் அவுட் மற்றும் லீக்' முறையில் போட்டிகள் நடந்தன. அரையிறுதி லீக் சுற்றுக்கு சென்னை பல்கலை., எஸ்ஆர்எம் பல்கலை., கோவை பாரதியார் பல்கலை., மைசூர் பல்கலை. ஆகிய 4 அணிகள் தகுதி பெற்றன.

நேற்று நடந்த அரையிறுதி லீக் சுற்று முடிவில் சென்னை பல்கலை. 7 புள்ளி மற்றும் அதிக கோல் அடித்த அடிப்படையில் முதலிடத்தையும், மைசூர் பல்கலை. 7 புள்ளிகளுடன் 2வது இடத்தையும், கோவை பாரதியார் பல்கலை. 3வது இடத்தையும், எஸ்ஆர்எம் பல்கலை. 4வது இடத்தையும் பிடித்தன. மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவில் பாரதிதாசன் பல்கலை. துணைவேந்தர் செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அணிகளுக்கு கோப்பை வழங்கினார்.

போட்டியின் சிறந்த வீராங்கனை யாக தேர்வு செய்யப்பட்ட மைசூர் பல்கலை. அணி வீராங்கனை பத்மாவதி மெட்லிக்கு தினமலர் நிறுவனர் டிவிஆர் நினைவு கோப்பையும், சிறந்த கோல் கீப்பராக தேர்வு செய்யப்பட்ட பாரதியார் பல்கலை. அணி வீராங்கனை ஷர்வியாவுக்கு தினமலர் பங்குதாரர் ஆர். ஆர் நினைவு கோப்பையும், அதிக் கோல் அடித்த மைசூர் பல்கலை. மானு ஷாவுக்கு சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஹோலி. ராஸ் கல்லுாரி முதல்வர் இசபெல்லா ராஜகுமாரி, பல்கலை. பதிவாளர் (பொ) காளிதாசன், போட்டி பார்வையாளர் மகாதேவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போட்டி அமைப்பு செயலாளர் மகபூப்ஜான் வரவேற்றார். உடற்கல்வி இயக்குனர் திரவியா கிளாடினா நன்றி கூறினார்.



சிறந்த வீராங்கனைக்கான தினமலர் நிறுவனர் டிவிஆர் விருது பெற்ற மைசூர் பல்கலை. பத்மாவதி மெட்லி.



சிறந்த கோல்கீப் பருக்கான தினமலர் பங்குதாரர் ஆர்.ஆர். நினைவு கோப்பை வென்ற பாரதியார் பல்கலை. வீராங்கனை ஷர்வியா.



திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் நடந்த தென்மண்டல பல்கலை. மகளிர் ஹாக்கி போட்டியில் முதலிடம் பிடித்து கோப்பை வென்ற உற்சாகத்தில் சென்னை பல்கலை. அணி வீராங்கனைகள்.

மலைக்கோட்டை கறிக்கோழி
மொத்த விற்பனையாளர்கள் நல சங்கம்
RFBA
பதிவு எண்: 217/2022
இன்றைய விற்பனை விலை கிலோ
31-12-2024
திருச்சி ரூ. 115
பெரம்பலூர் ரூ. 105
புதுக்கோட்டை ரூ. 115
அரியலூர் ரூ. 115
சிறிய கோழி 1.700க்குள் ரூ.3 அதிகம்

Galaxy
HEALTH INSURANCE
Lifelong Income Opportunity
BECOME A GALAXY HEALTH INSURANCE ADVISOR
Be Your Own Boss!
Any Life Insurance Agents | Any General Insurance Agents | Employees
House wives | College Students
Teachers | Retired Employes
Marketing Executives | Auditors
Chartered Accountant
98430 45128